புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
ISSN : 2456-821X
Peer-Reviewed
UGC CARE LIST
UGC Care Listed Journal (2023 onwards)
Sacred Heart Research Publication, Sacred Heart College, Tirupattur-635601, Tamilnadu, India
Volume : 07, Issue : 01/02 - March 2023

# இனவரைவியல் நோக்கில் கீதாரி நாவல்

**கட்டுரையாளர்**

*திருமதி நா. குமுதா.*
*உதவிப்பேராசிரியர்,*
*தமிழ்த்துறை,*
*பூசாகோஅர கிருஷ்ணம்மாள் மகளிர் கல்லூரி.*
*கோயம்புத்தூர்-4.*

**ஆய்வுச்சுருக்கம் :**

*சங்ககாலத்தில் முல்லை நில மக்களாக அடையாளப்படுத்தப்பட்ட ஆயர்கள், இடையர்கள், கோவலர்கள், எனப்படும் ஆநிரைகளை வளர்க்கக்கூடிய இனக்குழுவை சார்ந்த சமூகத்தவரை பற்றிய நாவலாக அமைந்த கதையே கீதாரி எனப்படும் நாவலாகும். இந்நாவல் இடையர் இன மக்களின் சாதாரண வாழ்வியல் சம்பவ விவரிப்புகளின் வழியே இடையர்களின் இனவியல் பண்பாட்டு வழக்காறுகளான தொழில் முறை, இடம்விட்டு இடம் பெயரும் நாடோடி வாழ்க்கை முறை,அவர்களின் திருமண முறை, வழிபாட்டுச் சடங்குகள்,ஒரு சில நம்பிக்கைகள் போன்றவற்றை ஆழமாக பதிவு செய்வதோடு அவர்கள் சமூகத்தில் பெண் வாழ்வில் வகிக்கும் இடம், சந்திக்கும் சிக்கல்கள் போன்றவற்றையும் அழுத்தமாக பதிவு செய்கின்றன. இடையர் எனப்படும் கீதாரி இன மக்கள் இடம்விட்டு இடம் நகரும் நாடோடி வாழ்க்கையை மேற்கொண்டனர். ஓர் இடத்தில் இருந்து இன்னொரு இடத்திற்கு தங்களுடைய உடைமைகளான ஆடு மாடுகளை இட்டுச் செல்லும் ஊர்களில் அங்கு நில உடமை சமூகத்தினராக இருக்கக்கூடியவர்களிடம் அண்டி பிழைத்துள்ளனர். நாட்டாருக்கே உரிய வழக்காறுகளை சிறப்பாக இந்நாவல் பதிவு செய்துள்ளது. அவ்வகையில் இன வரைவியல் நோக்கில் கீதாரி நாவலில் பதிவு செய்யப்பட்டுள்ள இடையர் இன சமூகத்தின் வழக்காறுகளைப் பற்றி இக்கட்டுரையில் ஆய்வு செய்யப்பட்டுள்ளன.*

***திறவுச்சொற்கள்: கீதாரி, இடையர்கள், வழக்காறுகள், வாழ்வியல்.***

## *முன்னுரை :*

*தற்காலத்திற்கேற்ப வாழ்வியலைத் தகவமைத்துக் கொண்டு வாழ முற்படும் இடையர் இன பிரிவினரின் பயணத்தை இயல்பாக பதிவு செய்யும் கீதாரி நாவலில் அவர்களுக்கான*

*நிலையான இருப்பிடமென்று எதையும் பதிவு செய்யவில்லை. மேமங்கலத்தை சொந்த ஊராக கொண்ட இம்மக்கள் தொழில் சார்ந்து புலம் பெயர் வாழ்க்கையையே மேற்கொள்கின்றனர். செல்லும் ஊர்களில் வாழிடம் சார்ந்து கூண்டோ, வளசையையோ அமைத்துக் கொண்டு வாழ்கின்றனர். காலத்திற்கு ஏற்ப தங்களை முன்னேற்றம் பெற்ற சமூகமாக மாற்றிக்கொள்ள அவர்கள் நிலம் வாங்கி வீடு கட்டுவதற்கான எண்ணம் நிலவுவதனையும் இந்நாவல் பதிவு செய்கிறது. காலத்திற்கு ஏற்ப பயணிக்க வேண்டும் என்ற உந்துதலிலும் இவர்களுடைய வழக்காறுகள் மாறாமல் பிணைவதனையும் இவ்வாய்வு விளக்குவதாக அமைகின்றது.*

***நாட்டார் என்பவர் :***

*நாட்டார் யார் என்பது குறித்து பல்வேறு கருத்துக்கள் நிலவி வருகின்றன. நாட்டார் அடித்தள மக்களில் ஒரு குழுவினர் என்றும்,சமூகத்தின் மேல் தட்டு வர்க்கத்தினருக்கு அல்லது கற்றோருக்கு எதிரான"இழிசினர்"என்றும், ஒருபுறம் நாட்டார் என்போர் நாகரிகத்துக்கு மாறுபட்டோர் என்றும் மற்றொருபுறம் நாட்டார் பரிணாம நிலையில் அவர்களை விட கீழ் நிலையினர் என்று கருதப்பட்ட விலங்காண்டிகள்(savages) அல்லது தொல்பழங்குடியினர் என இவ்வாறாக பல கருத்தாக்கங்கள் நிலவிய போதும் கீதாரி நாவலைப் பொருத்தமட்டில் நாட்டார் என்பதனை குறித்து " பண்நெடுங்காலமாக தங்களுடைய பண்பாட்டு மரபில் இருக்கும் வழக்காறுகளை பின்பற்றி வரக்கூடிய இனக்குழு மக்களே நாட்டார்" என்று வரையறுக்க வாய்ப்பு உள்ளது. அவ்வகையில் இடையர் இன மக்களின் பழக்கவழக்கங்கள், சடங்குகள், நம்பிக்கைகள்,விழாக்கள், உணவு முறைகள் போன்றவற்றை இன வரைவியல் அடிப்படையில் ஆராய்வதாக இவ்வாய்வுக் கட்டுரை அமைந்துள்ளது.*

***இடையர் இன மக்களின் வாழ்வியல் நம்பிக்கைகள் :***

*"தமிழரின் நம்பிக்கைகள் பரந்துபட்டவை. அவை காலம் காலமாய் மக்களிடையே வழக்கில் பயின்று வந்திருப்பதை இலக்கியங்களில் குறிக்கப்படும் நம்பிக்கைகளை விட தனிமனித வாழ்வில் நிலவும் நம்பிக்கைகள் பலதரப்பட்டவை.எனவே இலக்கியங்கள் பேசிச் செல்லும் நம்பிக்கைகளை கடந்தகால நிகழ்காலச் சான்றுகள் கொண்டு சமூக மானுட உளவியல் கண்ணோட்டங்களின் வழிக் காண்பது பயனுடையதாக அமையும்" (த. ப. வ. ந 106 )*

*கீதாரி நாவலில் சில நம்பிக்கைகள் காணப்படுவதை கொண்டு நிகழ்கால நிகழ்வுகளை கொண்டு அறிய முடிகின்றது.ஒரு சமயம் கிடைக்கூலி தராமல் ஏமாற்றிய வயல்காரனுக்கு வாக்கு விடுவது என்ற ஒரு நிகழ்வில் "சுடாத பச்சை மண்பானையை எடுத்துக்கொண்டு வந்து புதிதாக குட்டி ஈன்ற ஆடுகளில் பாலை கறந்து எடுத்துக்கொண்டு ஒரு கட்டி சூடமும் ஒரு எலுமிச்சை பழமும் வாங்கிக்கொண்டு கிடைக் கட்டிய அந்த ஏமாற்றுக் காரனின் வயலுக்கு போனார்கள். வயலின் சனி மூலையில் ஆழமாய் குழி தோண்டி அதற்குள் சுடாத மண் பானையை புதைத்து வைத்தார்கள். சூடத்தை கொளுத்தி விட்டு எலுமிச்சம் பழத்தை பானைக்குள் போட்டார்கள் பின் ஆட்டுப்பாலை பானை நிறையும் அளவுக்கு ஊற்றினார்கள். பானையை மண் அள்ளிப் போட்டு மூடினார்கள் "எங்கள தேடி கண்டுபிடிச்சு கிடைக்கூலிய கொடுத்து வாக்கு தீத்துக்கிர்ற வரைக்கும் வெள்ளாம புல்லு பூண்டு எதுவும் முளைக்காமல் பொட்டலமா பெயிரணும், இந்த கொல்லயின் அருவும் அத்தமிச்சிப் பெயிறனும் "என்று வாக்கு விட்டு திரும்பிப் பார்க்காமல் வந்துவிட்டார்கள் (கீ.ப.145).*

*நிமித்தம் என்பது வாழ்வில் பின் நிகழவிருக்கும் நன்மை தீமைகளை சில குறியீடுகளின் வாயிலாக முன் அறிவிப்பதாகும். இதனை சகுனம் என்கின்றனர். பழங்காலத் தமிழர் இதனை "புள்" "நிமித்தம்"ஆகிய இரு சொற்களால் சுட்டியுள்ளனர். செயல்களில்*

*நிகழும் நன்மை தீமைகளை நிச்சயிக்கும் நிலையில் அவை நன்நிமித்தம் தீநிமித்தம் எனப் பகுக்கப்படுவதுண்டு. அவ்வகையில் கீதாரி நாவலில் நம்பிக்கைகளும் நிமித்தங்களும் குறிப்பிடத்தக்கனவாக அமைகின்றன.*

*கீதாரியில் நன்நிமித்தமாக இடையர் இன சமூகத்தில் ஆடுகள் ஈனும், குட்டிகளை வைத்து சில நம்பிக்கைகள் நிலவியதனை இந்நாவலில் "பொன்னளந்தாஞ்சுழி "வகை ஆடுகள் குட்டி ஈனும் பொழுது ஆடுகள் நிறைய பெருகி பெரும் வருவாயை தரும் என்பது அவர்களின் நம்பிக்கையாக இருக்கிறது (கீ.ப.171).*

***தீநிமித்தம் :***

*முயல் சிதறி ஓடுவதை இடையர்கள் தம் வாழ்வில் தீய நிமித்தமாக அவர்கள் நம்பி வந்தனர். "மொசச் சவுனம் பொல்லச் சவுனம்"(கீ.ப.127) என்ற வரிகளில் தீய நிமித்தத்தின் முன்னறிவிப்பு முயல் சிதறி ஓடுவது. ஆடுகள் கிடைகட்டப்பட்ட இடத்தில் இருந்து ஆடு திருடும் சிலர் அங்கிருந்த ஆடுகளுள் எட்டு கிடாய்களையும், ஒன்பது ஆடுகளையும் திருடிச் சென்றனர். ஒரே இரவில் அவ்வளவு ஆடுகளை களவு கொடுத்த ஆட்டுக்காரர்களின் நிலை பரிதாபமாக இருந்தது.*

***மூடநம்பிக்கைகள்:***

*மூடநம்பிக்கைகள் மக்களின் அறியாமையின் அளவினை வெளிப்படுத்தும். சிந்தனை திறனற்ற மக்கள் வாழுகின்ற சமுதாயத்தினரின் அறிவு வளர்ச்சிக்கு பொருந்தாத பொருளற்ற நம்பிக்கைகளையும் சடங்குகளையுமே பொதுவாக மூடநம்பிக்கை எனக் குறிப்பர். (த. ப. வ. ந.107)*

***கலம்தொடா மகளிர் :***

*பெண்கள் பூப்புற்றிருக்கும் காலங்களில் வீட்டுப் பண்டங்களைத் தொடாமல் ஒதுங்கி வாழ்ந்தமையால் அவர்களை கலம் தொடாமகளிர் எனப்பட்டனர். உலகளாவிய நம்பிக்கை வயப்பட்ட செயலான இந்நிலை பண்டையத் தமிழர்களிடமும் நிலவியதனை பழந்தமிழ் இலக்கியச் சான்றுகள் குறித்துள்ளன.*

***அணங்குடை முருகன் கோட்டத்துக்***

***கலம் தொடா மகளிரின், இகந்து நின்றவ்வே (புறம்.299)***

*பெண்கள் பூப்படையும் நிலை பருவமுதிர்ச்சியின் அறிகுறியாகும். அந்நிலையில் அவர்கள் தீண்டத்தகாதவர்களாகக் கருதப்படுகின்றனர். இவ்வழக்கம் இனக்குழுச் சார்ந்த மக்கள் பெரும்பாலோரிடம் காணமுடிகின்றன. மாதவிலக்குக் கொண்ட பெண் ஒருத்தி இனிய பலம் தரும் மரத்தின் அடியில் நின்றால் அம்மரத்தின் பழத்தினுடைய இனிப்பு கொடிய கசப்பாக மாறிவிடும் அவள் தானியத்தைத் தொட்டால் அத்தானியம் விதைப்பதற்கு உதவாது அவை முளைக்கும் சக்தியையும் இழந்து விடும் போன்ற பல்வேறு மூடநம்பிக்கைகள் நிழவுகின்றன.*

*சிவப்பி பூப்படைந்தவுடன் அவளை மாட்டுக் கொட்டகையில் ஒரு ஓரமாக இருக்கச் செய்கின்றனர் (கீ.ப.66). இலுப்பைப் பூவால் செய்யப்பட்ட பதனத்தை சிவப்பித் தொட்டால் கெட்டுவிடும் என்பதை "நீ கை வச்சிடாத கெட்டுப் போயிரும் ரெண்டு மூணு நாளு வச்சிருந்து கூட திங்கலாம் சலுபடுச்சு போயிட்டுன்னாக்கா அப்புறம் குப்பையில தான்கொட்டணும்"(கீ.ப.84).*

***கீதாரியில் நாட்டார் தெய்வங்கள் :***

இடையர்கள் வணங்கும் நாட்டார் தெய்வங்களாக நல்லமுனி, நெறஞ்சாயி,மகமாயி, மாரியம்மன் போன்ற நாட்டார் மரபு சார்ந்த தெய்வங்களோடு திருச்செந்தூர் வேலன் மரபும் கலந்த நிலையை காண முடிகின்றன.

**இடையர்களின் குணநலன்களும் ,முதலாளித்துவத்தின் வெளிப்பாடுகளும்:**

கால அடிப்படையிலும், புவியியல் அரசியல் பண்பாடு ஆகியவற்றின் அடிப்படையிலும் முதலாளித்துவம் பல்வேறு பட்ட நிலையில் காணப்படுகின்றன. முதலாளித்துவத்திற்கு அடங்கி செல்லக்கூடிய சமூகங்களாக இடையர் இன மக்கள் காட்சி படுத்தப்பட்டுள்ளனர். இதனை கீதாரி நாவலில் ஆட்டுக்காரர்களுக்கே உரிய கோழைத்தனம் இருக்கத்தான் செய்தது. ஊரு விட்டு ஊரு வந்த நாடோடிகள் போல் பிழைப்பு நடத்த ஆட்டுக்காரர்கள் ஊமைகளாகவே எங்கும் இருந்தார்கள் ரோஷம் அவமானம் என்பதையெல்லாம் இவர்கள் ஒருபோதும் நினைப்பதே இல்லை வலிய கூப்பிட்டு இவர்களை எவ்வளவுதான் அடித்து உதைத்தாலும் ஏனென்று கேட்கமாட்டார்கள் எவ்வளவு கீழ் தரமாக ஏசினாலும் பொறுமையாக கேட்டுக் கொண்டு வாய் திறக்காமல் போகும் இயல்புடையவர்களாகவும்''யாரும் எங்கள சும்மா அடிக்க மாட்டாக போன வருசம் மொத வருசத்துல அவுக கொல்லப் பயிறு பச்சியில எங்க ஆடுக மேஞ்சிருக்கும்.அந்த கோவத்துல அடிக்கிறாக.அவுக அடிக்கிறது ஞயாயம்தானே? நம்மமேல தப்புருக்கு,பட்டுக்கிட்டுதானே போவணும்'' என்றுகாட்சிப்படுத்தப்பட்டுள்ளனர். (கீ. ப.111)

நிலவுடைமைச் சமூகத்தின் எச்சங்களாகவும், முதலாளித்துவ சமூகத் தோற்றத்திற்குப் பிந்தைய ஒரு வாழ்நிலையிலும் சாதியைக் கைவிட்டுவிடாத சமுதாயத்தின் வெளிப்பாடாக கீதாரியில் நில உடமையாளர்களால் ஆதிக்கம் செலுத்தப்பட்ட இடையர் இன மக்களின் வாழ்வியலை வெளிப்படுத்துகின்றன.

கரையாங்காட்டுப் பண்ணையார் சாம்பசிவம் தான் வளர்த்த சிவப்பிக்கு கொடுத்த பாலியல் தொந்தரவு காரணமாக சிவப்பி இறந்துவிடுகிறாள். திட்டக்குடி பண்ணையார் சுந்தரமூர்த்தியால் வெள்ளைச்சாமியின் குடும்பம் சிதைந்து விடுகிறது. பண்ணைக்காரர்கள் நிலவுடைமையாளர்கள் அதனால் அடுத்த பெண்களின் மீது தங்களுடைய வன்மத்தை வெளிப்படுத்துவதை கீதாரி நாவலில் காண முடிகின்றன.

**சடங்குகள்:**

சடங்குகள் மரபு வழிபட்ட செயல்முறைகளை அடிப்படையாகக் கொண்டு அமைய காண்கிறோம். சடங்குகள் என்பன மனிதனோடும் இனக்குழுவோடும் தொடர்புடையன. ''பழங்குடிச் சமுதாயங்கள் முதல் ஊரகச் சமுதாயங்கள், நகரச் சமுதாயங்கள் வரை அனைத்து சமுதாயங்களிலும் எண்ணற்ற வாழ்வியல் சடங்குகள் நிகழ்த்தப்படுகின்றன. தமிழர்களிடமும் பல்வேறு சடங்குகள் காலம் காலமாக வழக்கில் இருந்து வருகின்றன. இச்சடங்குகள் அனைத்தும் வாழ்வைப் பல தொடர்நிலைகளாகப் பிரித்து ஒன்றிலிருந்து மற்றொன்றுக்கு மக்களை அறிமுகப்படுத்தும் பொருட்டு ஏற்படுத்தப்பட்டுள்ளன(ப. மா.525).

இடையர்களின் திருமணச் சடங்கில் ஆடு மேய்க்கக்கூடிய தடி கம்பினை வைத்து தாலி கட்டப்படுகின்றன. கரிச்சாவின் திருமணத்தில் கூண்டின் வரிச்சியில் செருகி இருந்த தடிக்கம்பு தான் மணையில் அவளுடன் மாப்பிள்ளையாய் உட்கார்ந்திருந்தது. மாப்பிள்ளையை எதிர்பார்க்காமல் அவன் ஆடு மேய்க்கும் தடி கம்பியை வைத்தே திருமணச் சடங்கை மேற்கொண்ட இடையர் இன மக்களின் வழக்காறு குறிப்பிடத்தக்கதாகும்.

**பொங்கல் விழா:**

*விழாக்கள் என்பன மக்கள் ஒன்று சேர்ந்து நடத்தும் கூட்டுச்சடங்குகளிலிருந்து தோன்றியனவாகவே காட்சி தருகின்றன. விழாக்கள் மீவியற்கைக் கூறுகளோடு நெருங்கிய தொடர்புடையன எனலாம். மக்களே விரும்பியேற்றுக் கொண்டாடும் நிலையில் விழா சடங்குகளில் இருந்து வேறுபட்டு விளங்கக் காண்கிறோம். ஒரு சமுதாயத்தின் வளர்ச்சி, வீழ்ச்சி, போக்கு, மறுமலர்ச்சி ஆகியவற்றை அச்சமுதாயம் காலம் காலமாக போற்றிக் கொண்டாடிக் கொண்டிருக்கும் விழாக்களின் வழி அறிய இயலும். கீதாரியில் இடையர் இன மக்கள் கொண்டாடும் பொங்கல் விழா நடத்தப்பட்டமுறை அவ்வினத்தின் அடையாள விழாவாக அமைகின்றன.*

*தளுவை போடும் இடத்திற்கு எதிரே சிறிய தெப்பம் வெட்டி அதில் தண்ணீரும் மஞ்சள் நீரும் ஆட்டுப்பாலும் ஊற்றி தெப்பத்தை நிரப்பினார்கள். தெப்பத்திற்கு முன்பாக கும்பம் ஜோடித்து வைத்துக் கொண்டார்கள். தெப்பத்திற்கு மேலாக கரும்புகளை வளைத்துக் கட்டி அழகுப்படுத்தினர். படையலிடும் நேரத்தில் ஒவ்வொருவருடைய கிடையிலிருந்தும் ஒவ்வொரு இளம் ஆட்டுக்குட்டியை பிடித்து வந்து தெப்பத்தை சுற்றி கட்டிக் கொண்டனர். அந்தக் குட்டிகளை மஞ்சள் நீரால் குளிப்பாட்டி பொட்டிட்டு பூமாலையும் போட்டனர். பின்னர் அந்தக் குட்டிகளின் ஒரு பக்கத்து காதுகளை அறுத்து தெப்பத்திற்குள் போட்டனர். அறுத்த காதலிலிருந்து வடியும் ரத்தத்தையும் தெப்பத்திற்குள் விழும்படி செய்தார்கள். பின்பு படைத்த தழுவைச் சோற்றை அக்குட்டிகளுக்கு ஊட்டினார்கள். (கீ.ப.114).*

**திருஷ்டி கழித்தல்:**

*திருஷ்டி கழிக்கவென்று சோறு பொங்கிய கோட்டிற்குள் பனை ஓலைகளை போட்டு எறியவிட்டு அதில் உப்பையும் மிளகாயையும் போட்டனர் உப்பு வெடிக்கும் சத்தத்துடன் மிளகாய் கருகும் நெடியுடனும் நெருப்பு உயரமாய் எரிந்து கொண்டிருக்கும்போதே ஆடுகளை விரட்டி அந்தக் கோட்டைத் தாண்டச் செய்தனர்.*

**வாய்மொழி கதைப் பாடல்களும், பழமொழிகளும் :**

*கதை என்பதற்கு சொல்லுதல் என்பது பொருள். இக்கதை பாடல்கள் கவிதையின் வழி எடுத்துரைக்கப்படுபவை, உரைநடை வழி எடுத்துரைக்கப்படுபவை என்று இருவகைப்படும். கவிதையின் வழி எடுத்துரைக்கப்படுபவை(balled), எனப்படும். கதையாடல்களுள் ஒருவகை கற்பனையாகப் புனைந்து எடுத்துரைக்கப்படுபவை. தொல்காப்பியம் இதனை*

**"பொருளோடு புணர்ந்த நகைமொழி யானும்"(தொல். செய் .475 )** *என்கிறது*

*நாட்டார் கதைகளுக்கு காலமும் இடமும் இல்லை. அதாவது அவற்றில் வரும் நிகழ்ச்சிகள் இன்ன இடத்தில் இன்ன காலத்தில் இவர்களுக்கிடையே இன்னவாறு உண்மையாக நடந்தவை என்பதில்லை. இதனால் தான் கதைக்குக் காலுண்டோ, கையுண்டோ என்ற வழக்கு தமிழகத்தில் காணப்படுகின்றன. பெரும்பாலும் இத்தகைய கதைகளில் வரும் காட்சிகளில் இரண்டு கதாபாத்திரங்களே ஊடாட்டம் செய்யும். நிகழ்வுகள் தர்க்க அடிப்படையில் ஒன்றன் பின் ஒன்றாக ஒரு வரன்முறையில்(sequence) வந்தமையும். ஒவ்வொரு நிகழ்வும்ச் தொடர்ந்து வரும் நிகழ்வை தர்க்கரீதியாக கட்டுப்படுத்தும்.*

**பொரிய பொரிச்சுவச்சி -நீ**

**பொழுதிருக்க செத்திருந்தா**

**பொரிய தின்னுப் புட்டு -நா**

**போதரவா மாரடிப்பேன்**

***அவுல இடிச்சிவச்சி -நீ***

***அந்திசாய செத்திருந்தா***

***அவுல தின்னுப்புட்டு -நா***

***ஆதரவா மாரடிப்பேன் (கீ.ப.87,88)***

***பழமொழிகள்:***

*வாய்மொழி சார்ந்த நாட்டார் வழக்காறுகளில் குறுவடிவமுடையது பழமொழி. இதனை தொல்காப்பியம்,*

***"நுண்மையும் சுருக்கமும் ஒளியுடைமையும்***

***எண்மையும் என்று இவை விளங்கத் தோன்றி***

***குறித்த பொருளை முடித்ததற்கு வரூஉம்***

***ஏது நுதலிய முதுமொழி என்ப " (தொல். பொ.479)***

*ஒவ்வொரு வட்டாரத்திற்கு ஏற்ப பழமொழி சொலவடை,சொலவந்தரம், ஒவகதை, ஒப்புத்தட்டம் என்று பலவாறு குறிப்பிடுவர்.*

*நாட்டார் வழக்காறுகளைப் போலப் பழமொழிகள் சொந்தக் கருத்துப் புலம்பாட்டத்திற்குத்(தற்சார்புடைய, தற்சார்பற்ற) கருவிகளாகப் பயன்படும். (நா. வ. ப.208).எதனையும் ஏற்றுக் கொள்வதாக இருந்தாலும்,கண்டனம் செய்வதாக இருந்தாலும், கேலியாக இருந்தாலும், வேண்டுகோளாக இருந்தாலும், உருவகமாக இருந்தாலும், இப்படி எதுவாயினும் தமிழ் பெண்டிரைப் பொறுத்தவரை ஒரு பழமொழி அவர்வசம் இருக்கும்.பழமொழிகளைக் கொண்டு அடிக்கடி விவாதம் செய்வர். அவ்வகையில் கீதாரியில் இடையர் இன மக்களுக்கே உரிய வகையில் பழமொழிகள், விடுகதைகள் அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கனவாகும்.*

***" வித்தாடு அருகும் செத்தாடு பலுக்கும்"(கீ.ப.144)***

***" விடியா மூஞ்சி வேலைக்கு போனா வேல கெடச்சாலும் கூலி கிடைக்காது"(கீ.ப.148)***

***" அத்திகொளத்துல தண்ணி, ஆலங்காட்டுல வெறவு, நெல்லு வயத்துல அரிசி, ரெண்டு பொண்டாட்டிக்காரன் வூட்டுலருக்கு நெருப்பு"*** *எல்லாத்தையும் கொண்டாந்து தந்தா சோறாக்கி இப்பவே போட்டர்றன்*

*இதுபோன்ற சொலவடைகள் அவ்வினத்திற்கே உரிய மனத்தின் வெளிப்பாடுகளாகவும் அமைந்திருப்பதனை காண முடிகின்றன.*

***தொகுப்புரை:***

*கீதாரி நாவலில் இடையர் இனக்குழு மக்களின் வாழ்வியல் வழக்காறுகளாக நம்பிக்கைகள்,நிமித்தங்கள், சடங்குகள்,விழாக்கள், தெய்வங்கள், வாய்மொழி வழக்காறுகள் போன்றவற்றை நாட்டார் வழக்காற்றியல் வழியில் விரிவாக இனவரைவியல் அடிப்படையில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளன.*

***விளக்கங்கள்:***

1. *கீ – கீதாரி*
2. *ப -பக்கம்*
3. *தொல் -தொல்காப்பியம்*
4. *த. ப. வ. ந – தமிழர் பழக்கவழக்கங்களும் நம்பிக்கைகளும்*
5. *ப. மா – பண்பாட்டு மானிடவியல்*
6. *நா.வ.அ- நாட்டார் வழக்காற்றியல் சில அடிப்படைகள்*

***துணை நின்ற நூல்கள் :***


*(1).சு. தமிழ்ச்செல்வி – கீதாரி. முதல் பதிப்பு, டிசம்பர்.2008. நியூ செஞ்சுரி புக் ஹவுஸ். அம்பத்தூர்,சென்னை -600098*

*(2). தே. லூர்து – நாட்டார் வழக்காற்றியல் சில அடிப்படைகள். மூன்றாம் பதிப்பு -ஜூலை 2008, Folklore Researces and Research Centre. St. Xavier's college. Palayamkottai-627002.*

*(3). முனைவர் க.காந்தி- தமிழர் பழக்கவழக்கங்களும் நம்பிக்கைகளும். மூன்றாம் பதிப்பு 2003. உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம், சி. ஐ. டி. கேம்பஸ். சென்னை-600113.*

*(4) பக்தவச்சல பாரதி – பண்பாட்டு மானிடவியல். முதற்பதிப்பு : நவம்பர் 1990. மெய்யப்பன் பதிப்பகம், சிதம்பரம்-608 001.*

*(5). இளம்பூரனார் உரை – தொல்காப்பியம் பொருளதிகாரம். முதற் பதிப்பு மே 2005. சாரதா பதிப்பகம் ராயப்பேட்டை, சென்னை -14.*